டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.10.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 108 - Madurai | Online Edition

# வேளாண் விளை நிலங்களிலிருந்து நுகர்வோரை சென்றடையும் அறுவடைக்குப் பிந்தைய இந்தியாவின் விநியோக நடைமுறைகள்

புது தில்லி, அக்.30

இந்தியாவில் அறுவடைக்குப் பிந்தைய நடைமுறைகள் மிகப் பெரிய பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக விரைவில் அழுகக் கூடிய பழ வகைகள், காய்கறிகள், பால், இறைச்சி, கோழி மற்றும் மீன் ஆகியவற்றை விநியோகிப்பதில் பல்வேறு சவால்கள் உள்ளன. அறுவடைக்குப் பிந்தைய வேளாண் விளைபொருட்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து, பாதுகாப்பதற்கான கிடங்கு வசதிகள், பதப்படுத்துதல் போன்ற விநியோகச் சங்கிலிகளில் குறிப்பிடத்தக்க இழப்பு ஏற்படுவதாக பல்வேறு ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இது போன்ற சவால்கள் விவசாயிகளின் வருவாயைக் குறைப்பதுடன் நுகர்வோருக்கான விலைவாசியும் அதிகரிக்க வழி வகுக்கிறது. மேலும் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கேள்விக்கு உள்ளாகிறது.

இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகம் ஒருங்கிணைந்த குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

பிரதமரின், வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு பகுதியாக குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விளைவிக்கப்படும் இடத்திலிருந்து சில்லறை விற்பனை நிலையங்களை அடையும் வரை உள்ள விநியோக நடைமுறைகளில் பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் குளிர்பதனக் கிடங்குகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற 15-வது நிதிக்குழுக் கூட்டத்தில் பிரதமரின் வேளாண் மேம்பாட்டுத் திட்டத்திற்காக கூடுதலாக 1920 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியது. இதன் மூலம் 2026 மார்ச் மாதம் வரை இத்திட்டத்திற்காக மொத்தம் 6,520 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# பூக்கள் மிகுதியாக பூத்து திரட்சியான நிலக்கடலை பெற இலை வழி ஊட்டச்சத்து கரைசல்



திருச்சி, அக்.30

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், மணப்பாறை வட்டாரத்தில் அமைக்கப்பட்ட TMV–14, VRI-10 நிலக்கடலை விதைப்பண்ணை மற்றும் லால்குடி வட்டாரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட நெல் ஆடுதுறை – 36, விதை பண்ணைகளை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி ஆய்வு மேற்கொண்டார்.

விவசாயிகள் நிலக்கடலை விதைப்பண்ணையில் மகசூலை அதிகரிக்கவும், பொக்கற்ற திரட்சியான காய்களைப் பெறுவதற்கும் மிக முக்கியமான இரு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த கேட்டுக் கொண்டார். பூக்கும் தருவாயில் பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் மிகுதியாக பூக்கவும், அறுவடையின் போது திரட்சியான நிலக்கலைகளைப் பெறவும் இலை வழியே ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பது அவசியமாகும்.

இதற்கு ஒரு ஏக்கர் பரப்பிற்கு ஒரு கிலோ டி.ஏ.பி. 400 கிராம் அமோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் ஆகியவற்றை இலை வழியாகத் தெளிக்க வேண்டும். இதற்காக முதல் நாள் இரவே 15 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். பின்னர், மறுநாள் காலை அக்கரைசலை வடி கட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலுடன் தேவையான நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக தயார் செய்ய வேண்டும்.

அத்துடன் பிளானோபிக்ஸ் என்னும் பயிர் வளர்ச்சி ஊக்கியை 140 மில்லி லிட்டர் கலந்து விதைத்த 25-ம் நாள் ஒரு முறையும்,

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பின்னர் 35-ம் நாள் மறுமுறையும் ஆக இரு முறை தெளிக்கும் பொழுது பரிந்துரைக்கப்பட்ட அளவு சரியாகவும், வயலில் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிலக்கடலை பயிரில் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்கவும், திரட்சியான எண்ணெய் சத்துமிக்க காய்கள் பெறுவதற்கும், சுண்ணாம்பு சத்தும், கந்தக சத்தும் தேவைப்படுகின்றன.

எனவே 45ஆம் நாள் நிலக்கடலைக்கு மண் அணைப்பதற்கு முன் ஏக்கருக்கு 80 கிலோ கிராம் ஜிப்சம் இட்டு, களைகளை நீக்கி, செடிகளை சுற்றி நன்கு மண் அணைத்துவிட வேண்டும். இதனால் நிலக்கடலை பயிரின் விழுதுகள் மண்ணுக்குள் இறங்கி அறுவடையின் போது திரட்சியான காய்கள் அதிகளவில் உருவாக உதவுகிறது.

முதிர்ச்சி அடைந்த காய்களை சுத்தம் செய்து நல்ல தரமான விதைகளை விவசாயிகள் விதை பயன்பாட்டுக்காக தேர்வு செய்து விவசாயிகள் விதைகளை வழங்கும் போது அந்த விதைகளுக்கு உள்ளூர் சந்தையில் விலை கிடைப்பதை விட அதிக விலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் கிடைக்க பெறுவதால் அதிக லாபம் பெறலாம்.

எனவே நெல், பயறு வகைகள் மற்றும் நிலக்கடலையில் விதைப்பண்ணை அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை அணுகி விதைப் பண்ணைகள் அமைத்து பயன் பெறலாம் என்று அவர் கூறினார்.

ஆய்வின் போது, விதைச்சான்று அலுவலர்கள் க.வேல்முருகன், எஸ்.எம்.நி ஷாத், ச.இலட்சுமிகாந்தன் மற்றும் உதவி விதை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கரும்பு சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடு

## கரும்பு தாய்க்குருத்து வெட்டும் கருவி

கரும்புகள் ஒரே சீராக மற்றும் பருமனான கரும்புகளை அதிக எண்ணிக்கையில் பெற நீடித்த நிலையான கரும்புச் சாகுபடி தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இச்சாகுபடியில் கரும்பு நாற்று நடவு செய்த 30ம் நாள் தாய்க்குருத்தை 25 மி.மீ. (1 இஞ்சி) மேல் வெட்டி விட வேண்டும். அதற்கு கத்தரிக்கோல், கத்தி மற்றும் அரிவாள்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

குனிந்தவாறு இக்கருவிகளைப் பயன்படுத்துவதால் முதுகுவலி வருவது மட்டுமல்லாமல், கருவிகளின் கூர்முனையால் கைகள் மற்றும் கரும்புத் தோகையின் கூர்முனை பகுதியால் கண் களுக்கும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், குறைந்த எண்ணிக்கை யிலான கரும்புத் தாய்க்குருத்தை வெட்டுவதற்கே அதிக நேரமும், செலவும் ஆகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் பண்ணை இயந்திர வியல் மற்றும் சக்தி பொறியியல் துறை, இரண்டு வகையான கரும்புத் தாய்க்குருத்து வெட்டும் கருவியை உருவாக்கி உள்ளது. மேலும், இக்கருவிகளுக்கான காப்புரிமையை இந்தியாவின் அறிவுசார்ச் சொத்து அலுவலகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 20 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது.

ஒரு கையால் இயக்கப்படும் கரும்புத் தாய்க்குருத்து வெட்டும் கருவி இக்கருவி பிரதானக் குழாய், கத்தரிக்கோல், இயக்கக் கம்பி மற்றும் கைப்பிடி போன்ற பாகங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கருவியின் எடை ஒரு கிலோவிற்கும் குறைவாக இருப்ப தனால், பெண்களும் மிக எளிதாகக் கரும்பு தாய்க்குருத்தை வெட்ட முடியும். இதனால் விளைகின்ற கரும்புகள் ஒரே சீராகவும், பருமனா கவும் கரும்புகளை அதிக எண்ணிக்கையிலும் பெற முடியும். ஒரு மணி நேரத்தில் 800க்கும் மேற்பட்ட கரும்புத் தாய்க்குருத்துக் களை வெட்டலாம். இக்கருவியைப் பயன்படுத்துவதால் 50 சதவிகி தத்திற்கு மேல் நேரம் மற்றும் செலவைக் குறைக்க முடியும். இரு கைகளால் இயக்கப்படும் கரும்புத் தாய்க்குருத்து வெட்டும் கருவி இரும்பு பட்டை, இரும்பு குழாய் (கைப்பிடி) மற்றும் வர்த்தக ரீதியாகக் கிடைக்கும் கத்தரிக்கோலைப் பயன்படுத்திக் கரும்புத் தாய்க்குருத்து வெட்டும்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருவியைப் பயன்படுத்தி 1 மணி நேரத்தில் 1200 கரும்புத் தாய்க்குருத்துகளை வெட்ட முடியும்.

இந்தக் கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் முதுகுவலி போன்ற இன்னல்களை வெகுவாகக் குறைக்க முடியும். மேலும், இதன் மூலம் பண்ணைத் தொழிலாளர்களின் செயல்திறனைக் குறைக்கவும் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் முடியும். இக்கருவியின் எடை 1.6 கிலோ என்பதால் மிக எளிதாகப் பெண் பண்ணைத் தொழிலாளர்களும் இக்கருவியைப் பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான கரும்புத் தாய்க்குருத்துகளைச் சிரமமின்றி வெட்டமுடியும். வேளாண் பெருமக்கள் இத்தகைய கருவிகளைப் பயன்படுத்தி வேலையாட்களுக்கு ஆகும் செலவைக் குறைத்து பயன்பெறலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.




# பயிர்க் காப்பீடு செய்ய அறிவுறுத்தல்

சேலம், அக்.30

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.தமிழ்செல்வன், பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தியுள்ளார். பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) ராபி பருவதற்கான பயிர் காப்பீடு செய்ய ஓர் அறிய வாய்ப்பு.

இப்பயிர் காப்பீடு செய்வதன் மூலம் விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று மற்றும் அதிக பரப்பளவில் பூச்சி நோய் தாக்குதல் ஆகிய இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில் பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

**விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை மற்றும் காலக்கெடு விபரங்கள்**

ராபி பருவத்தில் பருத்தி பயிரிடும் விவசாயிகள் 31.10.2025க்குள் ஏக்கருக்கு ரூ.680/- மற்றும் நெல் பயிரிடும் விவசாயிகள் 15.11.2025க்குள் ஏக்கருக்கு ரூ.568/- செலுத்தி பயன் பெறுமாறும், மேலும் பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகள் ஆதார் அட்டை, நில உரிமை பட்டா, அடங்கல் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறுவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாக உரிய தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்ய கேட்டுக்கொண்டார்.

மேலும் விபரங்களுக்கு கொங்கணாபுரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பயிற்சி



திண்டுக்கல், அக்.30


திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை துறையின் மூலம் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பண்ணைபட்டி கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சி ரெட்யார்சத்திரம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி ஆலோசனை படி எம்.எஸ்.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிலைய தலைவர் தேவராஜ், ஒருங்கிணைந்த பண்ணையம், மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற வறட்சியை தாங்கக்கூடிய பயிர் ரகங்கள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் முக்கியத்துவம், நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயி களுக்கு விளக்கி கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் மூர்த்தி, எ-ஹிழிது மதிப்பு கூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் திட்டங்கள் பற்றி கூறினார். ரெட்டியார்சத்திரம் வட்டாரம் உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகர், பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தினார். தோட்டக்கலை துணை அலுவலர் சக்திவேல் காய்கறி மகத்துவ மையத்தில் தேவையான விதை நாற்றுக் களை பதிந்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம் என கூறினார்.

தோட்டக்கலை உதவி அலுவலர் பொன்ராம், தோட்டக்கலை துறை திட்டங்கள் பற்றி கூறி விவசாயிகளுக்கு விதை தொகுப்புக் களை வழங்கினார். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி அலுவலர் செந்தில் குமார் கலந்து கொண்டார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# மக்காச்சோளப் பயிரில் படைப்புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்திட ஆலோசனை

புதுக்கோட்டை, அக்.30

புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்காச்சோளப் பயிரினைத் தாக்கும் படைப்புழுவினை ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.



விவசாயிகள், மக்காச்சோளப் பயிரில் படைப்புழுத் தாக்குதலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தவில்லையெனில் புழுவின் தாக்குதல் தீவிரமாகிப் பயிர்ச் சேதம் மற்றும் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை பயன் படுத்தி கட்டுப்படுத்திட கேட்டுகொள்ளப்படுகிறது.

## தாக்குதலின் அறிகுறிகள்

தாய் அந்துப்பூச்சியானது, முட்டை குவியல்களைப் பெரும்பாலும் இலையின் அடிப்பகுதியில் இடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலையின் அடிப்பகுதியினைச் சுரண்டித் தின்றுச் சேதத்தை விளைவித்து இலைகள் பச்சையத்தை இழந்து வெண்மை யாகக் காணப்படும். மூன்றாம் நிலையிலிருந்து ஆறாம் நிலை வரையிலான புழுக்கள் இலையுறையினுள் சென்று பாதிப்பை உண்டாக்கும். இதனால் இலைகள் விரிவடையும் நிலையில் வரிசை யாகத் துளைகள் இட்டது போல் காணப்படும். மேலும், வளர்ந்த புழுக்கள் தண்டுப் பகுதிகளையும், மக்காச்சோளப் பயிரின் அடிப் பகுதியையும், நுனிப்பகுதியையும் தின்று சேதம் விளைவிக்கும்.

## ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

- மெக்காச்சோளப் படைப்புழுவின் முட்டை குவியல்கள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.
- கோடை உழவு செய்து மண்ணிலுள்ள கூட்டுப் புழுக்களை அழிக்கலாம்.
- ஒரே தொகுப்பாக ஒரே சமயத்தில் மக்காச்சோளத்தை விதைப்பதன் மூலம் படைப்புழு தாக்குதலை குறைக்கலாம்.
- உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்களை ஊடுபயிர் சாகுபடி செய்ய வேண்டும்.

● ஒரு ஏக்கருக்கு 10 எண்கள் பறவை தாங்கிகள் அமைத்து கட்டுப்படுத்தலாம்.

● மக்காச்சோள வயல்களை சுற்றி, மூன்று அல்லது நான்கு வரிசைகள் வரப்பு பயிராக நேப்பியர் புல் போன்ற பொறிப் பயிர்களை பயிரிட வேண்டும்.

● ஒரு ஏக்கருக்கு 15 எண்கள் இனக்கவர்ச்சிப் பொறி வைத்து ஆண்அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

● பூச்சிகளை தாக்கும் பூஞ்சானங்களான மெட்டாரைசியம் அனிசோபிளே, பேவேரியா பேசியானா. இதில் ஏதாவது ஒன்றை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் நீரில் கலந்து 10 நாட்கள் இடைவெளியில் இலை உறைக்குள் நன்கு படுமாறு தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

● இயற்கை ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகத் தட்டைப்பயறு, சூரியகாந்தி, எள் போன்ற பயிர்களை வரப்புப் பயிராகப் பயிரிட வேண்டும்.

● கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 100 கிலோ கிராம் வேப்பம் பிண்ணாக்கு இட வேண்டும்.

● ஒரு கிலோ கிராம் விதைக்கு பூஞ்சாண வகை பூச்சிக் கொல்லியான பெவேரியா பேசியானா அல்லது தையோமீத்தாக்சம் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை 10 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும்.


**பூச்சி மருந்து தெளித்தல்**

● படைப்புழுவின் தாக்குதல் அதிகரிக்கும்பொழுது 15 முதல் 20 நாட்களில், அசாடிராக்டின் ஒரு சதவீத இ.சி. 400 மி.லி. அளவு அல்லது இமாமெக்டின் பென்சோயெட் 5 எஸ்.ஜி. 80 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தெளிக்கலாம்.

● 40-45 நாட்களில், ஸ்பைனிடோரம் 12 எஸ்.சி 100 மி.லி அல்லது நவ்லுரான் 10 இ.சி என்ற மருந்து 300 மி.லி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தெளிக்கலாம்.

● 60 முதல் 65 நாட்கள் வளர்ந்த பயிரில், தென்பட்டால் புளுபென்டையமைடு 480 எஸ்.சி. 80 மி.லி. அல்லது குளோரோன்டிரிபுரோல் 18.5 எஸ்.சி. 80 மி.லி. ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினைத் தொடர்பு கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மின்னல்கள் பல விதம்... அவை ஒவ்வொன்றும் ஒரு ரகம். தெரியுமா?



சமீப காலமாக மின்னல்கள் அதிகமாக தாக்குகிறது. இதுவும் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் நிகழ்வாக கருதப்படு கிறது. மின்னல் வானில் நிகழும் அற்புதம். அதுவும் பருவமழை காலங்களில் நடக்கும் வாண வேடிக்கை. அப்படிபட்ட மின்னல்களில் பல விதங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு ரகமாக பார்க்கலாம். அவை பற்றி விரிவாக பார்ப்போம்.

**மின்னல்களின் வகைகள்**

1) CG என்று அழைக்கப்படும் (CLOUD TO GROUND) அதாவது மேகத்திலிருந்து பூமிக்கு பாயும் மின்னல் இது தான். அதுமட்டுமல்ல அதிகமாக நிகழும் மின்னல் இது. மிகவும் அழிவை எற்படுத்தக்கூடிய மின்னலும் இது தான். இந்த வகை மின்னலின் போது மின்சார சக்தி (ELECTRIC CURRENT) மேகத்திலிருந்து தரைக்கு பாய்கிறது. இந்த வகை மின்னல் தான் பசுமையான மரங்கள், மனிதர்கள், விலங்குகள் மீது பாயும் ஆபத்தை விளைவிக்க கூடியது.

2) I.C என்று அழைக்கப்படும் (INTRA CLOUD LIGHTNING) இவ்வகை மின்னல்கள் மேகவங்கிக்குள்ளேயே (CLOUD BANK) ஏற்படும் மின்னலாகும். இதை SHEET மின்னல் என்றும் அழைப்பார்கள். ஒரு மேகத்துள்ளேயே மின்னோட்டங் களை பிரிந்து பறந்து சேர்வதால் உண்டாகும் மின்னல் தான் இது.

3) CC (CLOUD TO CLOUD) மேகத்திற்கு மற்றொரு மேகத் திற்கும் இடையே நடக்கும் (ELCTRICAL CHARCE) பரிமாற்றம் தான் இவ்வகை மின்னல் ஏற்படுவதற்கு காரணமாகும். இவ்வகை மின்னல்களால் விமானத்திற்கு (AEROPLANE) ஆபத்தை விளைவிக்க கூடியவை.

4) வெப்ப மின்னல் என்று அழைப்படும் (HEAT LIGHTNING) மின்னல்கள் தூரத்தில் பளிச்பளிச் என்று மின்னும். ஆனால் இதன் இடி ஓசை காதுகளுக்கு வந்து சேராது.

5) BOLT FROM BLUE என்ற வகை மின்னல் மிகவும் அரிதாக தான் தோன்றும். தலைக்கு மேல் மேகம் ஒன்றும் இல்லாத போது மின்னல் தாக்கும். இது உண்டாகும் விதம் மிகவும் ஆச்சரியமான நிகழ்வு. இந்த வகை மின்னல்கள் வெகு தூரத்தில் வெகு உயரத்தில் உண்டாகி செங்குத்தாக பூமியை நோக்கி பாயாமல், கிடைமட்டமாக (HORIZONTAL) வெகு தூரம் வானில் பயணம் செய்து மழை மேகமில்லாத இடத்தைக் தாக்கும். இதை தான் ஆங்கிலத்தில் 'நீல வானத்திலிருந்து விழுந்த இடி' என்று கூறுவார்கள்.

எந்த வகை மின்னல்கள் வானில் தோன்றினாலும் நாம் எச்சரிக்கையாக பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# நெல் சாகுபடியில் அடியுரம் மேலுரம் போடுவது குறித்து தகவல்

விருதுநகர், அக்.30

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளார் நிறுவனத்தின் பங்குதாரராக உள்ள விவசாயிகள் தற்போது நேரிடையாகவும் நாற்று பாவியும் ஒரு சில இடங்களில் நாற்றுகள் நட்டும் அதற்கு அடியுரம் மேலுரமிடுதல் போன்ற பணிகள் குறித்த தகவலை வேளாண் ஆலோசகர் சந்திரசேகரன் தெரிவித்தார்.



அவர் கள ஆய்வுக்காக தொட்டியான்குளம், நெய் விளக்கு நெடுங்குளம் கிராமத்தில் நேரடி/நடவு நட்ட வயலை ஆய்வு செய்தார்.

அப்போது கூறுகையில், நெல் பயிரில் நாற்று நட்ட 10-12வது நாளில் ஏக்கருக்கு அரை மூட்டை டி.ஏ.பி அத்துடன் 20 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். கடைசி உழவில் நுண்ணூட்ட சத்து ஏக்கருக்கு 5 கிலோ இடவேண்டும். நேரிடை விதைப்பு நெல்லில் பயிர்கள் இல்லாத இடங்களில் (GAP FILLING) அதிகமாக உள்ள இடங்களிலிருந்து நாற்றுகளை நடவேண்டும்.

தற்போது எங்கும் தண்ணீர் இருப்பதால் மேலுரமாக யூரியா 20 கிலோ + 15 கிலோ பொட்டாஷ் + 20 கிலோ ஜிப்சம் இடலாம். வரப்பு ஓரத்தில் தட்டை பயறு விதை ஊன்றிட கூறினார். இதனால் கூடுதலான வருமானம் கிடைப்பதுடன் நெல்லில் பூச்சி கட்டுப்பாடு உண்டாகும் என்றார்.

மேலும் செயல் அலுவலர் பார்த்த சாரதி கூறுகையில், வருகிற மாதங்களில் நெல் மற்றும் நிலக்கடலை பயிருக்கான பண்ணை பள்ளிகள் நடைபெற அனைத்து வகையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார். வருகிற 31 தேதியில் நமது ய்ணைநு, வின் இந்த ஆண்டிற்கான குழு கூட்டம் (GENERAL BODY MEETING) நடைபெறவிருப்பதாக தெரிவித்தார்.

சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் இந்த மாவட்டத்திலே முன்னோடி நிறுவனமாக செயல்படுகிறது, என்றும் முன்னோடி நெல் விவசாயிகளுக்கு உரச்செலவை குறைக்க அசோலா வித்துகளை வழங்கிட தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

அக்ரி கிளினிக்யில் இந்த பருவத்திற்கான அனைத்து இடு பொருட்களும் சேவையூர் மையத்தில் இருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் FPO செயல்பாட்டிற்கு உறுதுணையாக செயல் இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கள ஆய்விற் கான ஏற்பாடுகளை கிளினிக் மேலாளர் பிரியா அய்யப்ப பாண்டி சிறப்பாக செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விதை வாங்கும் போது விவசாயிகள் கவனிக்க வேண்டியவை

அனைத்து பயிர்களிலும் அதிக மகசூல் பெற தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். நல்ல முளைப்பு திறன், தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிர்ச்சி அடைதல், கலப்படம் இல்லா அதிக மகசூல் ஆகிய காரணங்களுக்காக சான்று விதை பயன்படுத்தப்படுகிறது.

சான்று பெற்ற விதைகளை அரசு அல்லது விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விற்பனையாளர்களிடம் வாங்க வேண்டும். சான்றட்டை பொறுத்தி உள்ளதா என சரி பார்க்க வேண்டும். விற்பனை ரசீதில் குவியல் எண் எழுதி பெற வேண்டும். அப்பொழுது தான் அந்த ரகம் எங்கு இருந்து பெறப்பட்டது என அறிய இயலும் எடை அளவு சரியாக உள்ளதா என பார்க்க வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ரகங்களின் விதை வாங்கும் போது தனித்தனியாக வைக்க வேண்டும். விதைப்பதற்கு முன்பு முளைப்பு திறன் சோதனை செய்ய வேண்டும். தேவைப்பட்டால் விதை மாதிரி எடுத்து விவசாயிகளே நேரடியாக தொண்டி சாலையில் விற்பனை குழு வளாகத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் கட்டணம் செலுத்தி ஆய்வு செய்து பிற ரக கலப்பு உள்ளதா, முளைப்பு திறன் எவ்வளவு உள்ளது என சரிபார்க்கலாம். இதன் மூலம் நடவு செய்த பின் ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்யலாம்.

வெவ்வேறு ரகங்கள் சாகுபடி செய்யும் போது நாற்று விடுவது ஒரிரு நாள் இடைவெளியில் விதைக்கலாம். இதனால் கலப்பு ஏற்படுவது தவிர்க்கலாம். திருந்திய நெல் சாகுபடி செய்ய இயலாத சூழ்நிலையில் எட்டு அடிக்கு ஒரு அடி பாத்தி விட்டு நட வேண்டும்.

இதனால் காற்றோட்டம் ஏற்படுவதுடன் உரம், பயிர் பாதுகாப்பு செய்ய வசதியாக இருக்கும். ஒரு ரகத்தில் மீதமுள்ள நாற்றுக் களை வேறு ரகம் நடவு செய்த வயலில் நடவு செய்ய கூடாது.

இந்த நடைமுறைகளை கடைபிடிக்குமாறு சிவகங்கை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சீ.சக்திகணேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மேம்படுத்தப்பட்ட கோழி ரகங்களை அறிமுகப்படுத்துதல்



கோயம்புத்தூர், அக்.30

2025-26 ஆம் ஆண்டு கோவை மாவட்ட வேளாண் அறிவியல் நிலையத்தில் முன்னிலை செயல் விளக்க திட்டத்தில் ஆதிதிராவிட மக்களை மேம்படுத்தும் நலத்திட்டத்தின் கீழ் மேம் படுத்தப்பட்ட கோழி ரகங்களான தானுவாஸ் அசில் சூலூர் வட்டாரத்தில் பதுவம்பள்ளி கிராமத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறுப்பு கலந்து கொண்டு கோழி வளர்ப்பின் முக்கியத்துவம் பற்றியும் அவற்றிலிருந்து எவ்வாறு வருமானம் பெறலாம் என்பது பற்றியும் மற்றும் குளிர் காலங்களில் நாட்டுக் கோழிகளை தாக்கும் வெள்ளை கழிச்சல் நோயும் தடுப்பு முறைகளை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் பதுவம்பள்ளி கிராமத்தை சேர்ந்த 20க்கு மேற்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய பெண்மணிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மேலும் அவர்களுக்கு 200 ஒரு மாத கோழி குஞ்சுகளும் அவற்றுக்கு தேவையான தீவனமும் மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சி கையேடும் வழங்கப்பட்டது.



# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் உயிர்மசான்று பெற அழைப்பு

சேலம், அக்.30

சேலம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அ,நவநீதகிருஷ்ணன், வெளியிட்ட செய்திக் குறிப்பில் ஒன்றிய, மாநில அரசு இணைந்து உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

தற்போது நச்சுத்தன்மையில்லாத விளைபொருட்களுக்கு அதிக ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் உள்நாட்டு சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது. தமிழ்நாட்டில் நச்சுத்தன்மையில்லாத விளை பொருட்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை பெரும் பங்காற்றி வருகிறது.

உணவு தானியம், சிறு தானியம், பயறு, எண்ணெய் வித்து, காய்கறிகள், மூலிகைப் பயிர் மற்றும் பழ சாகுபடியில் நச்சுத் தன்மையில்லாத விளைபொருட்கள் உற்பத்தி செய்வதில் தமிழ்நாட்டில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை மத்திய அரசின் தேசிய உயிர்மவேளாண்மை செயல் திட்டத்தின்படி அபீடா (APEDA) நிறுவனத்தின் வழி காட்டுதல் மற்றும் அங்கீகாரத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உயிர்ம விளைபொருட்களை உற்பத்தி செய்வோர், உயிர்ம முறையில் விவசாயம் செய்வதற்கான சான்று பெற தமிழ்நாடு அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் வாயிலாக தனிநபராக, குழுவாக அல்லது நிறுவனமாக பதிவு செய்து உயிர்ம வேளாண்மை சான்றை பெற்று பயன் பெறலாம்.

உயிர்மச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்படிவத்தை www.tnocd.net என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பண்ணையின் வரைபடம், மண், பாசன நீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர்த் திட்டம், ஆதார் அட்டை நகல், பான் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் மற்றும் இதர ஆவணங்கள் இணைத்து உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

சிறு, குறு, விவசாயிகளுக்கும், குழு பதிவிற்கும் 2025-26 நிதியாண்டில்மட்டும் பதிவு கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு வயல் ஆய்வு மேற்கொண்டு வாய்ப்பு சான்றிதழ் வழங்கப்படும். வாய்ப்பு சான்று ஓராண்டு வரை செல்லுபடியாகும். பதிவு செய்து 3 ஆண்டுகள் நிறைவு செய்த பின்பே பண்ணையானது உயிர்ம நிலையை அடையும்.

உயிர்ம வேளாண்மை சான்று பெற விவசாயிகள் சேலம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அறை எண் 403, நான்காவது தளத்தில் உள்ள விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# இப்கோ நானோ டி.ஏ.பி விதைநேர்த்தி விழிப்புணர்வு முகாம்

திருநெல்வேலி, அக்.30

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இப்கோ நானோ டி.ஏ.பி விதைநேர்த்தி விழிப்புணர்வு முகாம் நடைபெற்று வருகிறது.




இதனையடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் இப்கோ கள அதிகாரியால் நானோ டி.ஏ.பி விதைநேர்த்தியின் முக்கியத்துவம், பயன்படுத்தும் சரியான முறை, நானோ தொழில்நுட்பத்தின் நன்மைகள் மற்றும் அவை குருணை உரங்களைவிட அதிக வளர்ச்சி மற்றும்மகசூலை தரக்கூடியது என்றும் விவசாயி களுக்கு விரிவாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தானிய பயிர்கள், பயறு வகைப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் பருத்தி, கரும்பு ஆகிய பயிர்களில் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி அளவில் விதைநேர்த்தி செய்யலாம் அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி கலந்து நாற்று, கரணை, கிழங்கு போன்றவற்றில் நேர்த்தி செய்யலாம். நேர்த்தி செய்த விதைகளை நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்கலாம் என்றும் நானோ டி.ஏ.பி பயன்பாட்டினால் விதை முளைத்தல் விகிதம் அதிகரிக்கும், வேர் வளர்ச்சி சிறப்பாகும்,

இலைகளில் குளோரோபில் உற்பத்தி மேம்படும், தாவர நோய் எதிர்ப்பு சக்தி உயரும், விளைச்சல் மற்றும் வருமானம் அதிகரிக்கும் என்றும் விளக்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சனிக்கிழமை கிராம சபை கூட்டம் நடைபெறும்

மதுரை, அக்.30

01.11.2025 அன்று உள்ளாட்சி தினத்தையொட்டி அனைத்து வட்டாரங்களிலும் கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ளதால் வேளாண்மைத்துறை மூலம் 2025-26ஆம் ஆண்டு செயல் படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும், பசுந்தாள் உரச்சாகுபடி, தமிழ் மண்வளம் போர்டெல், உழவர் செயலி இயற்கை விவசாயம், உயிர்ம வேளாண்மை போன்றவற்றின் முக்கியத்துவம், ஊணி லுஷ்விழிஜ திட்டத்தில் சலுகைகளை பெறுவதற்கு ஆதார் எண்ணை இணைப்பது பற்றிய விளக்கம் மற்றும் தொழில்நுட்ப செய்திகள் வழங்கப்படும்.




மேலும், வேளாண்மைத் துறை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் (ATM), வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் (ATM) மற்றும் பயிர்அறுவடை பரிசோதகரர்கள் உட்பட அனைத்து களப்பணியாளர்களும் விவசாயிகளுக்கான அடையாள எண் வழங்கும் பணிக்காக (Farmer Registry) கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதால், காலை முதல்மாலை வரை Farmer Registry பணி நடைபெறும் எனவும், விவசாயிகள் தங்கள் பகுதியில் நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான திட்டங்கள் பற்றி அறிந்து கொள்ளு மாறும், விவசாயிகளுக்கான அடையாள எண் பெறாத விவச ாயிகள் தங்கள் விவசாய நிலத்தின் கணினி சிட்டா, ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசியுடன் கலந்து கொண்டு இத்தருணத்தினை பயன்படுத்தி விவசாய அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பருவ மழை துவங்கி விட்டது!

# விரைந்திடுவீர் விதை பரிசோதனைக்கு!!

தற்சமயம் பருவ மழை தொடங்கிவிட்டதால், விவசாயிகள் தங்கள் நிலங்களை தயார் செய்ய உழவுப் பணியில் தீவிரமாக இருக்கிறீர்கள். நிலத்தை நல்ல முறையில் சீர் செய்து பண்படுத்தி உழவுப்பணி மேற்கொண்டாலும் விதைக்கும் போது தரமான விதை உபயோகிப்பது மிக முக்கியமாகும்.

விதையானது ஒரு பயிரின் மகசூல், தரம், விளைபொருளின் சீரான தன்மை மற்றும் அதன் சந்தை விலை போன்றவற்றை நிர்ணயிப்பதற்கு அடிப்படை இடுபொருளாக விளங்குகிறது. தரமான விதைகளை சாகுபடிக்கு பயன்படுத்தினால்தான் நீர், உரம் மற்றும் பூச்சிமருந்து போன்ற இடுபொருட்களின் முழுப் பயனையும் பெற முடியும்.

**எது நல்ல விதை என்பதை எப்படி தெரிந்து கொள்வது?**

1. அதிகப்படியான முளைப்புத் திறன் உடையது.
2. அளவான ஈரப்பதம் கொண்டது.
3. இனத்தூய்மை உடையது.
4. பூச்சி/நோய் தாக்குதல் இல்லாத விதைகள். அதாவது அதிக புறத்தூய்மை கொண்ட விதைகள்.

இத்தகைய குணங்களை விதைப்பரிசோதனை செய்வதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

விதைத்த விதைகள் எல்லாம் ஒரு சேர முளைப்பது முக்கியம். அவ்வாறு முளைக்காத இடங்களில் மீண்டும் விதைகள் போட்டு பயிரை வளர்த்து மகசூலை அதிகப்படுத்துவது என்பது இரட்டிப்பு வேலையாகும். ஆகவே விதைக்கும் பயிரை முதலிலேயே கணிக்க விதையின் முளைப்புத் திறனை அறிந்து கொள்வது மிக முக்கியமாகிறது. விதை நன்றாக உலர்ந்து சேமிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும். ஈர விதைகளில் பூஞ்சை தொற்று விரைவில் ஏற்பட்டு விதைகள் பயனற்றதாகப் போய்விடும். எனவே அளவான ஈரப்பதம் விதை சேமிப்பிற்கு மிகவும் அவசியம். விதையின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரத்தன்மை மற்றும் பிற இரக விதைகளை கண்டறிதலுக்கு விதை பரிசோதனை செய்வது அவசியமாகும்.

விதைப்பரிசோதனைக்கு கீழ்க்கண்ட அளவுகளில் விதை மாதிரிகள் கொடுக்க வேண்டும்.

**பகுப்பாய்வு விதை மாதிரிகளின் அளவு**

| | |
|---|---|
| நெல் | – 400 கிராம் |
| பயறுவகைகள், சோளம் | – 150 கிராம் |
| மக்காசோளம், நிலக்கடலை | – 500 கிராம் |
| எள் | – 25 கிராம் |
| வெங்காயம், தக்காளி, கத்தரி, மிளகாய், கீரை | – 10 கிராம் |
| பூசணி, பந்தல்காய்கறிகள், வெண்டை | – 150 கிராம் |

விவசாயிகள் தாங்கள் சேமித்து வைத்துள்ள விதைகளையும், விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்து விற்பனைக் காக வைத்துள்ள உண்மை நிலை விதைகளையும், விதை விற்பனையாளர்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள விதைகளையும், ஈரோடு மாவட்டத்தில் திண்டல், வித்யாநகர் பகுதியில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80.00 (ரூபாய் எண்பது மட்டும்) என்ற வீதத்தில் செலுத்தி, விதையின் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிற இரக கலப்பு ஆகிய பரிசோதனைகள் மேற்கொண்டு பகுப்பாய்வு முடிவுகளைப் பெற்று விதையின் தரத்தை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதற்கான விதைகளையும், கட்டணத்தையும் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி : வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், வேளாண்மை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம் வாளகம், வித்யா நகர், திண்டல், ஈரோடு 638 012.

எனவே இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி விவசாயிகள் தரமான விதைகளை உபயோகித்து அதிக லாபம் அடைய ஈரோடு விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் த.ஆசைத்தம்பி, இ.விஜயா ஆகியோரால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

தொடர்புக்கு 98420 07125

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.

## வருடாந்திர விதை திருவிழா 2025

# விதைப்பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு



விருதுநகர், அக்.30

பண்பாடு, கலாச்சாரப் பெருமைக்குரிய நமது தமிழகத்தில் விவசாயிகள் தங்களது சொத்தைப் பேணுதல் போல வேளாண்மையின் முக்கிய மற்றும் முதன்மை இடுபொருளான விதைகளை பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினை அறிந்து பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். வேளாண் விளைபொருள்களின் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் தரமான விதைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. விதைகளே வேளாண் தொழிலில் பேராயுதமாக உள்ளதால் விவசாயிகள் அதிக மகசூல் பெற தரமான விதைகளை தேர்வு செய்து விதைக்க வேண்டியது அவசியமாகிறது. வேளாண் தொழில் உள்ள வரை விதைகளின் தேவை இருப்பதால் விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாறி விதை உற்பத்தியில் ஈடுபட்டு தானியங்களைவிட விதை களாக விற்பனை செய்யும் பொழுது அதிக வருமானம் ஈட்டலாம்.

இது தொடர்பாக விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, அறிவியல் நிலையத்தில் தரமான விதைகளின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கு ஏற்ற இயந்திரங்களை பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இயந்திரமயமாக்கப்பட்ட விதை உற்பத்தி என்ற மைய கருத்தை வலியுறுத்தி வருடாந்திர விதை திருவிழா 28.10.2025 அன்று நடைபெற்றது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

இவ்விழாவில் மாவட்ட அளவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். விதை முளைப்புத்திறனை அதிகரிக்க விதை நேர்த்தி செய்து விதைத்தல், பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட புதிய இரகங்களை பயன் படுத்துதல், விதை உற்பத்தியில் மேற்கொள்ள வேண்டிய வணிக உத்திகள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு, விதை தர கட்டுப்பாட்டிற்கான விதை சட்டத்தின் அடிப்படையில் தரமான விதைகளை தேர்வு செய்து பயன்படுத்துதல், விதைச்சான்றளிப்பு முறைகள் மற்றும் விதைப்பரிசோதனை முறைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

